DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | | |
|---|---|---|---|
| CC.NO. 216/14 | | Crime No.: | Station : |
| PW : 3 | LW :8 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | பொன்னுசாமி | Caste | |
| Father's Name | ஆறுமுகம் | Calling | |
| Village | புளியம்பட்டி | Religion | |
| Taluk | | Age | 66 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 07.06.2023. |

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை :-**

1. நான் புளியம்பட்டியில் வசித்து சைக்கிள் கடை வைத்து நடத்தி வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவது உள்ள கையொப்பம் என்னுடையது தான். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகரில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். 7-8 வருடங்களுக்கு முன்பு புளியம்பட்டி காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். ஆய்வாளர் கையெழுத்து போடும் படி கேட்டார் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன்.ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.3. கைப்பற்றுதல் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.4. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

**1.** கடந்த 23.12.2013ம் தேதியன்று மதியம் 12.15 மணிக்கு எதிரி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலிசார் உங்கள் முன்பாகவும் சாட்சி பிரபாகரன் முன்பாகவும் போலிசார் எழுதி கொண்டார்கள் என்றும், அதில் நீங்கள் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தீர்கள் என்றும், அதே தேதியன்று 13.45 மணிக்கு பாச்சமல்லனுர் பிரிவு புங்கம்பள்ளியிலிருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த 29.250 கிராம் எடையுள்ள தங்க செயின் ஒன்றினை கைப்பற்றுதல் மகசர் மூலம் உங்கள் முன்பாக கைப்பற்றினார் என்றும், அதில் நீங்கள் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தீர்கள் என்றும் போலிஸ் விசாரணயில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-**

வழக்கறிஞர் ஆஜர், வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை